RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd223S113

# Individual Moral Transformations in a Modern Environment

## சமகாலச் சூழலில் தனிமனித ஒழுக்க மாற்றங்கள்

**K. Chandrasekaran** [a,*]

[a] Department of Tamil, Arignar Anna Government Arts College, Namakkal-637002, Tamil Nadu, India.

*Corresponding author Email: dr.k.chandrasekaran2020@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S113

Received: 13-04-2022; Revised: 12-07-2022; Accepted: 15-07-2022; Published: 19-08-2022

**Abstract:** As long as the human race is stable and living in this world, man needs good thinking, virtues, good nature, and morals to live his life effectively. Not only is that individual morality necessary for man to relate to his surroundings. Our forefathers have divided and compiled the system of worship and explained it. Even if a person is born into high society, if he is undisciplined, he is of no use. There are many virtues in the human race, among which morality is admired as the foremost. Education is the basis of human morality. Discipline can lead to excellence in life. Morality is valued as a better quality than life itself. The purpose of this article is to examine how such a morality exists in the contemporary individual.

**Keywords:** Virtue, Morality, Early Morning, Midnight

**Language:** **Tamil**

### முன்னுரை

இவ்வுலகில் மனித இனம் நிலைப்பெற்று வாழும் வரையில் அம் மனிதன் தன் வாழ்க்கையைப் பயனுள்ள வகையில் சிறப்போடு வாழ்வதற்கு நற்சிந்தனை, நற்பண்புகள், நல்ல இயல்புகள், ஒழுக்கங்கள் ஆகியவை தேவைப்படுகிறது. அது மட்டுமின்றி மனிதன் தன் சுற்றத்தாரோடு உறவுக் கொள்ளுவதற்கு தனிமனித ஒழுக்கம் அவசியமாகிறது. அவ்வொழுக்க முறையினை வகுத்தும் தொகுத்தும் நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். ஒருவன் உயர்குடியில் பிறந்தவனாக இருந்தாலும் அவன் ஒழுக்கம் இல்லாதவனாக இருந்தால் அவற்றால் பயன் ஒன்றும் இல்லை. ஒழுக்கமே உயிரைவிட சிறந்த பண்பாகப் போற்றப்படுகிறது. அவ்வாறான ஒழுக்கம் சமகாலத்தில் தனிமனிதனிடம் எவ்வாறு உள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### ஒழுக்கம் என்பதற்கான விளக்கம்

ஒழுக்கம் என்பதைக் குறிக்கும் “மாரல்” என்னும் ஆங்கிலச் சொல் ‘மோர்ச்சு’ என்ற இலத்தின் மொழிச்சொல்லின் திரிபாகும். ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள், வழக்கமாக கொள்ளும் முடிவை ஒழுக்கமாகக் கொண்டனர்.

மனித இனத்திற்கேயுரிய தணிப்பண்புகள் பல, அவற்றுள் ஒழுக்கம் முதன்மையானதாகப் போற்றப்படுகிறது. ஒழுக்கம் என்னும் சொல் ‘ஒழுகு’ என்னும் சொல்லின் வேர்ச்சொல்லடியாகப் பிறந்ததாகும். ஒழுகு என்னும் சொல்லிற்கு இடையறாது நீர் ஒழுகுவதை ஒழுக்கு என்று கூறுவதைப்போல வாழ்க்கையில் உயர்ந்தவையாகக் கருதப்படும் நெறிமுறைகளை எக்காலத்தும் எவ்விடத்தும் இடையறாது மேற்கொண்டொழுகுவதே ஒழுக்கமாகும் என குறிப்பிடுகின்றனார் (Parimelalhagar, 2002).

ஒழுக்கம் என்னும் சொல் சீலம், நன்னடத்தை, ஆசாரம், உயர்ச்சி முறைத்தன்மை ஆகிய சொற்களால் அழைக்கப்படுகிறது. அத்தகைய சிறப்புப் பெற்ற ஒழுக்கத்தினை உலகம் ஒம்பிய கல்வியறிவு, நிரம்பப் பெறாதவர், அடங்கி நடக்கமாட்டார் என்கிறது பழமொழி.

## ஒழக்கத்தினால் வரும் சிறப்புகள்

ஒழுக்கம் என்கிற நல்ல விளைச்சலை நாம் காணவேண்டுமென்றால் எட்டு வகையான வித்துகளை நமக்குள் ஊன்ற வேண்டும் என்று ஆசாரக்கோவை கூறுகின்றது. நன்றி அறிதல் பண்பு, பிறர் செய்யும் தீமையை பொறுத்துக் கொள்ளுதல், இனிய பேச்சு பிற உயிரை துன்புறுத்தாமை, கல்வி நலம், மற்றவரோடு நட்புகொள்ளுதல் என்றும் எட்டு உயர் பண்புகள் நம்மிடத்தில் இருக்குமென்றால் வாழ்க்கையில் மேன்மை அடையலாம். இல்லையென்றால் இழுக்கத்தின் எய்வர் எய்தாப் பழி என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க தீராத பழி வந்து சேரும்.

## முந்தையோர் கண்ட ஒழுக்க நெறிகள்

நம்முடைய முன்னோர்கள் கடைபிடித்து வந்த ஒழுக்க நெறிகள் பற்றி ஆசாரக்கோவை கூறும்போது முன்னோர்கள் இடுப்பில் துணியின்றி நீராட மாட்டார்கள். ஒற்றை ஆடையோடு உணவு உட்கொள்ளமாட்டார்கள். இடுப்பில் கட்டிய ஆடையை குளிக்கும் நீரிலேயே பிழிய மாட்டார்கள், மேலாடை இல்லாமல் பெருமைக்குறிய சான்றோர், கற்றவர் கூடிய சபைக்குள் நுழைய மாட்டார்கள். மேலும்

“வைகறை யாமம் துயில் எழுந்து தான் செய்யும்

நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்

தந்தையும், தாயும் தொழுது எழுக என்பதே

முந்தையோர் கண்ட முறை”

விடியற்காலைப் பொழுதில் விழித்தெழுந்து, தான் அன்று செய்ய வேண்டிய நல்லறங்கள் பற்றி சிந்தித்து, அதன் வழி நடக்க வேண்டும். ஆவ்வாறு நடப்பவர் வாழ்க்கை சிறப்பாக அமையும் (Parimelalhagar, 2002).

மேலும், ஒழுக்கம் என்பதனைச் சிந்திக்கையில்,

“உயர்ந்த நெறியில் நின்று ஒழுகும் சான்றோர்கள்

வாழ்ந்து காட்டிய நெறிப்படி வாழ்தலே ஒழுக்கமாகும்” (Parimelalhagar, 2002)

## இலக்கியங்கள் கூறும் ஒழுக்கம்

மனித ஒழுக்கத்திற்கு அடிப்படையாக அமைவது கல்வியாகும், கல்வியின் வாயிலாகப் பெரும்பான்மையான நல்ஒழுக்கத்தைப் பெறமுடியும் என்பதை

‘நாளும் நவை போகான் கற்றல் மிக இனிதே’ (Sithamparanar sami, 2003)

என்னும் அடியில் நாள்தோறும் அறிவொழுக்கங்களைத் தரும் நல்ல நூல்களைப் படிக்க வேண்டும் என்கிறது இனியவை நாற்பது.

“விலங்கொடு மக்கள் அணையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏணையவர்”

என்னும் குறளடியில் புகழ்பெற்ற நல்ல நூல்களைக் கற்றவரே மாந்தர் ஆவர். கல்லாதவர் விலங்குகள் ஆவர் என்கிறார் வள்ளுவர் (Parimelalhagar, 2002).

நான்மணிக்கடிகை தனிமனித ஒழுக்கம் பற்றி கூறும்போது

‘ஒருவருக்கு கற்றலின் வாய்த்த பிறவில்லை’

என்னும் செய்யுளடியில் ஒருவருக்கு இறுதிவரை பயன்தரக்கூடியது கல்வி மட்டுமேயாகும். அதுவே அவருக்கு நிலையான செல்வமும் ஆகும் (Manikkavasagan, 2009).

“கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்

பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார் - தெற்ற

அறைகல் அருவி அணிமலை நாட

நிறைகுடம் நீர் தளும்பல் இல்"

என்னும் பாடலில் அடக்கமுடன் நடந்துகொள்ள கல்வியறிவு பெற்ற ஒருவனால் மட்டுமே முடியும் (Aravanan, 2003). நிறைகுடம் நீர் தளும்பாது, அதுபோல் நிறைந்த கல்வியறிவுடையவர் பெரியோர் முன் அடங்கி நடப்பர். உயர்ந்த பொருள் பற்றியும் எண்ணி ஆராய்ந்து, அதன் வழி நடப்பர். ஆனால், குறைகுடம் நீர் தளும்புவது போல ஒழுக்கம் இல்லாதவர் வாழ்க்கை சிறப்பில்லாமல் அமையும். உலகில் ஒழுக்கத்தில் சிறந்தோர் தவறாது தாய் தந்தையரைத் தொழுது எழ வேண்டும் என்பதே நம் முன்னோர் கண்ட வாழ்க்கை நெறியாகும்.

மேலும் பெரியோர்கள் மற்றவரின் அழுக்கு ஆடை மற்றும் செருப்பு போன்றவற்றை அணிய மாட்டார்கள், மின்னல் ஒளியையும், எரி நட்சத்திரங்கள் ஒளியையும் பார்க்க மாட்டார்கள். அதுமட்டுமல்லாமல், விலைமகளிரின் அலங்காரத்தையும் பார்க்க மாட்டர்கள். காடுகளை நெருப்பிட்டு அழித்தல், மற்றும் வழி தெரியாத காட்டில் தனியாகப் போதல் போன்ற காரியங்களை செய்ய மாட்டார்கள். எரியும் விளக்கை வாயால் ஊதி அணைத்தல், விளக்கில்லாம் உணவு உண்ணாமை, கை நீட்டிப் பேசுதல், பெண்களை நிமிர்ந்து பார்த்தல், அடுத்தவருக்காக வாழ்வது, மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வது, தீயவர்களுக்கு விலகியிருப்பது போன்ற அருங்குணங்கள் பெரியோருக்கே உரிய ஒழுக்க நெறியாகும்.

## இல்லற மகளிரின் ஒழுக்கம்

பெண்கள் காலையிலேயே துயில் எழ வேண்டும். வீடு விளங்கும்படி வீட்டைக் கூட்டிச் சுத்தம் செய்ய வேண்டும். பாத்திரங்களைத் துலக்க வேண்டும். பசுவின் சிறுநீரைத் தெளித்து வீட்டைப் புனிதமாக்க வேண்டும். பெண்கள் நீராடும் போது

"நீராடும் போல்தில் நெறிப்பட்டார் எந்நான்றும்

நீத்தர் உமியார், திளையார் விளையாடார்

காய்ந்தது எனினும் தலைஒழிந்து ஆடாரே

ஆய்ந்த அறிவினர்"

ஒழுக்க நெறியிலே நின்றவர்கள் தினந்தோறும் குளிக்கும் போது தண்ணீரிலே நீந்த மாட்டார்கள், நீரை வாயில் கொப்பளித்து உமிழ மாட்டார்கள், நீரைக் கலக்க மாட்டார்கள், நீரிலே விளையாட மாட்டார்கள், உடம்புக்குக் காய்ச்சலாயிருந்தாலும் தலை முழுகாமல் உடம்பு மட்டும் குளிக்க மாட்டார்கள். தலையிலேயே தடவிக்கொண்ட எண்ணையால் வேறு எவ்வுறுப்பையும் தொடக் கூடாது. எவ்வளவு அவசரமானாலும் பிறர்தரித்த செருப்பை மாட்டிக் கொண்டு நடத்தல் கூடாது போன்ற ஒழுக்கங்களைப் பின்பற்றி வாழ்கின்றனர் (Aravanan, 2003).

## சமகாலத்தில் ஒழுக்கம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்"

ஒழுக்கம் எல்லோருக்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால் அஃது உயிரினும் சிறந்ததாகப் பாதுகாக்கப் பட வேண்டும் (Parimelalhagar, 2002).

மனிதன் தோன்றியக் காலம் முதற்கொண்டு தற்காலம் வரையிலும் ஒழுக்கம் என்பது மனிதனின் உயிரோடு இணைந்த ஒன்றாகவே இருந்து வருகின்றது. நவீன காலமான இக்காலத்திலும் ஒழுக்கம் மேன்மையான ஒன்றாகவே காணப்படுகின்றது. அறிவியல் முறையில் பார்த்தாலும் கூட தலையிலே எண்ணையைத் தடவிக் கொண்டு அந்த எண்ணையைப் பிற இடத்தில் தடவும் போது

சுகாதாரக் கேடு ஏற்படும். பிறர் உடுத்திய ஆடையை நாம் பயன்படுத்தும்போதும், தொடும்போதும், பிறர் காலணிகளைப் பயன்படுத்தும்போதும் அதனால் அவர்களுக்கு இருக்கும் நோய் நமக்கும் ஏற்படும். அதனாலேயே அவற்றை கடைபிடிக்க வேண்டும் என்கின்றனர். இச்செயல் அனைத்து சமுதாய மக்களுக்கும் உரிய ஒழுக்கமாகும். ஒரு மனிதன் தன் செயல்கள் அனைத்திலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால் அவை சமுதாயத்திற்கும் பயன்படும் சிறந்த ஒன்றாக விளங்கும். அதனால் சமுதாய நலனுக்கு தனிமனித ஒழுக்கமே மிகவும் இன்றியமையாத ஒன்றாகும் என்பதே இக்கட்டுரையின் கருத்தாக அமைகிறது.

## முடிவுரை

மனதை இதமாகப் பெற்றவன் மனிதன். அதனால்தான் மக்கள் ஆறறிவுயிராகின்றனர். உண்பது நாழியானாலும், உடுப்பது நான்கு முழமானாலும் நினைந்து எண்ணுவன எண்பது கோடியாகும். இந்த ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உண்டானதாகும். நிலையற்ற வாழ்விலும் ஒழுக்கநெறி நின்றார் நீடு வாழ்வார். அதனால் நல்லொழுக்க நெறியிலே நிற்க வேண்டும். ஒழுக்க நெறியாக ஒருன் தன் உள்ளத்தில் அழுக்காறில்லா இயல்பைக் கொள்ள வேண்டும். ஏனெனில் அழுக்காறு இருக்குமாயின் பகைவர் இல்லாமலே ஒருவருக்கு கேடு ஏற்படும் என்று ஒழுக்கத்தின் சிறப்பு கூறப்படுகின்றது. ஒருவன் தன் உள்ளத்தில் அழுக்காறில்லா இயல்பைப் பெறுவதே ஒழுக்கமாகும். மனித ஒழுக்கத்திற்கு அடிப்படையாக அமைவது கல்வியாகும். ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால் வாழ்க்கையில் மேன்மை அடையலாம். முன்னோர்கள் பின்பற்றிய ஒழுக்க நெறியானது தற்காலங்களுக்கும் ஏற்ற ஒன்றாகவே காணப்படுகின்றன.

## References


Aravanan, K.P., (2003) Tamilar Ilakkiya Samooga Thalangal, Tamil Kottam, Chennai, India.

Manikkavasagan (2009) Nanmani Kadagi, Uma Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Sithamparanar Sami, (2003) Pathenen Keelkanaku Thamilar Valvum, Aarivu Pathipagam, Chennai, India.



### Funding

No funding was received for conducting this study.


### Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.


### About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



### Cite this Article

K. Chandrasekaran, Individual Moral Transformations in a Modern Environment, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 64-67. DOI: https://doi.org/10.54392/ijmrd223S113